**ஓடுவதற்கான காரணங்கள்**

**உறவுமுறையிலான சபையில் வாழ்தல், V**

Wayne Jacobsen



"நீங்கள் அவரோடு சேர்ந்திருக்க வேண்டும். அதுதான் தேவன் உங்களை ஆசீர்வதிப்பதற்கான ஒரே வழி."

நான் இந்த வார்த்தைகளைக் கேட்டேன். கேட்டு, எந்த அளவுக்கு அதிர்ச்சியடைந்தேன் என்றால், ஒரு கணப்பொழுது என் காதுகளையே என்னால் நம்பமுடியவில்லை. திருமணமாகி இரண்டு ஆண்டுகளேயான ஒரு பெண் தன் கணவனை விவாகரத்துசெய்யத் தயாராக இருந்தாள். அந்தப் பெண்ணுக்குமுன்னால் நான் உட்கார்ந்திருந்தேன். அவள் ஏற் கெனவே திருமணமானவள்; அந்தத் திருமணத்தின்மூலம் அவளுக்குப் பிள்ளைகளும் இருந்தார்கள். அவள் இந்தப் புதிய கணவனிடம் பட்ட பாடுகளும், அவனோடு தொடர்ந்து வாழ்ந்தால் அவளுடைய பிள்ளைகளுக்கு வரக்கூடிய ஆபத்தைப்பற்றி அவள் என்ன நினைத் தாள் என்றும் எனக்குத் தெரியும்.

அது ஒரு குழப்பமான சூழ்நிலை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. சூழ்நிலைக்கேற்ப, நாங்கள் அவர்கள் இருவரோடும் சேர்ந்து அழுதோம், ஜெபித்தோம், அவர்களுக்கு ஆலோசனை சொன் னோம். ஒரு சில நாட்களுக்குமுன் இன்னொரு தம்பதி என்னிடம் வந்து, "அந்தப் பெண்ணிடம் பேச கர்த்தர் எங்களுக்குத் தம் வார்த்தையைத் தந்திருக்கிறார். அதை நாங்கள் அவளிடம் பகிர்ந்துகொள்ளப் போகிறோம். நீங்கள் எங்களுடன் வாருங்கள்," என்று என்னை அழைத்தார்கள். சந்தே கத்துக்கு இடமேயில்லாமல், அவர்கள் அவள்மேல் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டு, தாங்கள் சொன்னதற்கு அவள் இணங்க வேண்டும் என்று அவளைக் கட்டாயப்படுத்தினார்கள். அங்கு ஏதோவொன்று மிகத் தவறாக இருந்தது என்று நான் புரிந்துகொண்டேன்.

நான் திரும்பி, அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவர்களுடைய வார்த்தைகளால் நான் எந்த அளவுக்கு அதிர்ச்சியடைந்திருந்தேனோ, அவளும் அதே அளவுக்கு அதிர்ச்சியடைந்திருந்தாள் என்பது அப்பட்ட மாகத் தெரிந்தது. அவள் பேசுவதற்குமுன், அவள் தப்புவதற்காக நான் ஒரு கதவைத் திறந்து கொடுத்தேன்.

"தேவன் ஏற்கெனவே உன் இருதயத்தில் ஏதோவொன்றை வைத்திருப்பார். இவர்களுடைய வார்த்தைகள் அதை எந்த அளவுக்கு உறுதிப்படுத்துகிறதோ, அந்த அளவுக்குத்தான் அவைகளுக்கு மதிப்புண்டு என்று நிச்சய மாக உனக்குத் தெரியும். அவர்களுடைய வார்த்தைகள் அதை உறுதிப்படுத்தவில்லையென்றால், அதைப் புறக்கணிக்க உனக்குச் சுதந்திரம் உண்டு," என்று நான் அவளிடம் கூறினேன். "அந்தத் தம்பதி இப்போது சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை," என்று அடுத்த சில நிமிடங்களில் அவள் கூறினாள். அவள் கர்த்தரை ஊக்கமாகத் தேடினாள். அவள் கூடி வந்த ஐக்கியத்தில், தேவபக்தியுள்ளவர்கள் என்று எங்களுக்குத் தெரிந்த இரண்டு பெண்களிடமிருந்து அவள் ஆலோசனை பெற்றுக்கொண்டிருந்தாள். பிரிந்துபோக வேண் டும் என்று அவள் எடுத்திருந்த தீர்மானத்தை அவர்கள் இருவரும் உறுதிசெய்தார்கள்.

"அப்படியானால், நீ தாராளமாகப் பிரிந்துபோகலாம். தேவனுடைய மனதில் வேறு ஏதாவது இருந்தால், அதை அவர் உனக்குத் தெளிவாகக் கூறுவார் என்பது நிச்சயம்," என்று நான் அவளிடம் கூறினேன்.

அவளுடைய வீட்டைவிட்டு வெளியே வந்து, நாங்கள் காரில் சென்றுகொண்டிருந்தபோது, அந்தத் தம்பதி என்னைக் கிழித்தெறிந்துவிட்டார்கள். "நீங்கள் அங்கு என்ன செய்தீர்கள் தெரியுமா? நாங்கள் அவளிடம் தேவனுடைய வார்த்தையைக் கூறினோம். ஆனால், அதை அசட்டைசெய்வதற்கு அவளுக்குத் தேவையான எல்லாச் சாக்குப்போக்குகளையும் நீங்கள் அவளுக்குக் கொடுத்தீர்கள்," என்று அவர்கள் என்மேல் சாடினார்கள். நான் எவ்வளவுதான் விளக்கம் கொடுத்தாலும், அதனால் அவர்களுடைய கோபத்தைத் தணிக்கமுடியவில்லை. வரப்போகிற வாரங்களில் ஏதாவது மாற்றம் நிகழாவிட்டால், இதற்குமேல் நீண்ட காலம் அவர்களோடு சேர்ந்து என்னால் சேவிக்க முடியாது என்று எனக்குத் தெரியும்.

மற்ற விசுவாசிகளுடன் உறவுகொள்ள நாம் விரித்த கரங்களுடன் ஓட வேண்டும் என்று வேதவாக்கியங்கள் எந்த அளவுக்குக் கூறுகின்றனவோ, அதே அளவுக்கு எல்லா உறவுகளும் ஆரோக்கியமானவை அல்ல என்றும் அவை நம்மை எச்சரிக்கின்றன. இதைப் புரிந்துகொள்ளத் தவறுவதால், அழிவுண்டாக்கும் உறவுகளில் அநேகர் சிக்கிக்கொள்கிறார்கள்; அது அவர்கள் தேவனோடு நடக்கும் நடையைப் படிப்படியாக அழிப்

பதோடு மட்டுமின்றி, காலப்போக்கில் மற்றவர்கள்மேல் ஒரு வெறுப்பு மனப்பான்மையையும் உருவாக்கி விடும்; அதனால், அவர்கள் ஆரோக்கியமான உறவுகொள்வதிலிருந்து பின்வாங்கிவிடுவார்கள்.

***எளிதானதல்ல***

மற்ற சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து நடப்பதின் மதிப்பைப்பற்றி வேதவாக்கியங்கள் திட்டவட்டமாகப் பேசுகின்றன. தேவன் என்னவாக இருக்கிறாரோ அவையெல்லாவற்றின் ஒரு சிறிய பகுதி மட்டும்தான் நம் ஒவ்வொருவருக்கும் தெரியும், ஒரு சிறிய பகுதியை மட்டும்தான் நாம் ஒவ்வொருவரும் பார்க்கிறோம். அதே ஜீவனைக் கண்டுபிடிக்கிற மற்ற சகோதர சகோதரிகளுடன் தேவன் நம்மை இணைக்கும்போது, நாம் அவருடைய நிறைவான சித்திரத்தைப் பார்க்க ஆரம்பிக்கிறோம். இந்தக் காரணத்தினால்தான் அவர் தம் சரீரத்தை, "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவு," என்று வரையறுத்தார்.

அந்த உறவுகள் நன்றாகச் செயல்படும்போது, பயணத்தைத் தொடர்வதற்கு அவை நம்மை உற்சாகப் படுத்தும், நம் இருண்ட தருணங்களில் அவை நம்மை ஆறுதல்படுத்தும், சோதிக்கப்படும்போது நாம் நம் நம்பிக்கையை வேறு எங்கேயோ வைப்பதற்குப்பதிலாகத் தேவன்மேல் வைப்பதற்கு அவை நமக்கு உதவும். உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வேலை நடைபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் விசுவாசிகளுடன் அப்படிப்பட்ட நட்பைப் பகிர்ந்துகொள்வதைவிடப் பெரிய பொக்கிஷம், இந்த உலகத்தில், வேறொன்றும் இல்லை.

மேற்கண்ட சத்தியத்தை நான் விசுவாசிப்பதால்தான் இங்கு எழுதுகிற எல்லாக் காரியங்களையும் நான் எழுதுகிறேன். கிறிஸ்துவின் சரீரத்தில் தனியே சுற்றித்திரிய விரும்புகிறவர்கள் இந்த வார்த்தைகளை எவ் வளவு எளிதாகத் தங்களுக்குச் சாக்குப்போக்காகப் பயன்படுத்த முடியும் என்று எனக்குத் தெரியும். அப்படிச் செய்தால் நீங்கள் உங்களுக்கு ஆபத்தை உண்டாக்கிக்கொள்கிறீர்கள். எனக்கு அதில் எந்தப் பங்கும் இல்லை. ஏனென்றால், நம் தேவன் ஒப்புரவாக்குகிற தேவன்; கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றையும் கூட்டிச்சேர்க்க வேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோள்.

எங்கு நாம் தேவனுடைய இருதயத்தைக் காண்கிறோமோ, அங்கு உறவுகள் கடினமான சூழ்நிலையி னூடாய்ச் செல்கிறது என்பதால், நாம் நம்மை மற்றவர்களிடமிருந்து தூரமாக விலக்கிக்கொள்ளச் சாக்குப் போக்குகளைத் தேட மாட்டோம். எனக்குச் சில நெருங்கிய நண்பர்கள் இருந்தார்கள்; எங்களுடைய நட்பு சில சமயங்களில் கடும் பிரச்சினைகளைச் சந்தித்திருக்கிறது; தவறாகப் புரிந்துகொள்ளுதல், மனித பலவீனம், தனிப்பட்ட தோல்விகள் ஆகியவைகள் காயத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. உறவுகளில் பிரச்சினை ஏற்படும்போதெல்லாம், நாம் தப்பித்துக்கொள்ள வகை தேடினால், கிறிஸ்துவுக் குள் நட்பு உண்மையாகவே எவ்வளவு மலைக்கத்தக்கதாக இருக்க முடியும் என்பதை நாம் ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டோம்.

ஆயினும், சில உறவுகளில் கொஞ்சம் விசுவாசிகள் மற்ற விசுவாசிகளைத் தந்திரமாகக் கையாண்டு, அவர் களைக் கட்டுப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட உறவுகளால் நோய்வாய்ப்பட்ட விசுவாசிகளையும் நான் அடிக்கடிப் பார்த்திருக்கிறேன். இவர்கள் தாழ்மையாகவும், திறந்தமனதுடனும் இருக்க விரும்புகிறார்கள்; எனவே, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தவறான ஆலோசனைக்கும், அறிவுரைக்கும் இடம் கொடுக் கிறார்கள். மேலும். மற்றவர்கள் தங்களிடம் எதிர்பார்ப்பதை தங்களால் நிறைவேற்றமுடியாதபோது, குற்ற வுணர்வினால் ஆட்கொள்ளப்படுகிறார்கள்.

இந்தக் காரணத்தினால்தான், நாம் ஒருவரையொருவர் ஆழமாக அன்புசெய்ய வேண்டும் என்றும், கடினமான வேளைகளில் நாம் ஒருவரையொருவர் தாங்க வேண்டும் என்றும், ஒருவரொருவருடைய குற்றங் களை மன்னிக்க வேண்டும் என்றும் மட்டும் புதிய ஏற்பாடு கூறாமல், உறவுகள் அழிப்பவைகளாக மாறும்போது நாம் அவைகளை உணர்ந்து, அவைகளிலிருந்து போதுமான தூரத்துக்கு விலக வேண்டும் என்றும் கூறுகிறது.

***எந்த சம்பந்தமும் வைத்துக்கொள்ள வேண்டாம்***

"அவர்களோடு எந்த சம்பந்தமும் வைத்துக்கொள்ள வேண்டாம்." இப்படிப்பட்ட மிக எளிமையான சொற் களில் பவுல் இதைச் சொல்கிறார். இன்னொரு விசுவாசியோடு நாம் கொண்டிருக்கும் உறவு நாம் தேவனை இன்னும் அதிகமாக அறிவதற்கும், அவரை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றுவதற்கும் நமக்கு உதவாது என்பதற்கான அறிகுறிகளை இனங்கண்டுகொள்ள, பல்வேறு வகையான சூழ்நிலைகளில் அவர் இந்தப் பதத்தைப் பயன்படுத்தினார். அவர்களை விட்டு விலகி இருக்க வேண்டும் என்று அவர் நம்மை எச்சரிக் கிறார்; அவர்களை நியாயந்தீர்த்தோ அல்லது அவர்கள்மேல் உள்ள கோபத்தினாலோ அல்ல; மாறாக, நம்மிடம் இருக்கும் ஆவிக்குரிய வேட்கையை அவர்கள் விழுங்கிவிடாதபடிக்கு அல்லது நம்மைத் தவறான வழியில் நடத்திச்செல்லாதபடிக்கு நாம் விலகிவிட வேண்டும்.

இவைகள், குறிப்பாக, நாம் மதிக்கின்ற மக்களிடமிருந்து வரும்போது அல்லது கடந்த காலத்தில் நமக்கு உதவிசெய்த மக்களிடமிருந்து வரும்போது, இனங்காண்பது எப்போதும் அவ்வளவு எளிதல்ல; பெரும் பாலும் நம் வாழ்க்கையில், மிகவும் நல்லெண்ணம் கொண்ட மக்கள் தங்களை அறியாமலேயே, தேவன் நம்மிடம் சொல்வதை நாம் செய்யாதபடிக்குத் தடுத்துவிடுகிறார்கள் .

இயேசு, இந்த நிஜத்தைத் தமக்கு மிக நெருக்கமான ஒரு நண்பனிடத்தில் சந்தித்தார். எருசலேமுக்குப் போவதைப்பற்றியும், அங்கு சம்பவிக்கவிருந்த சிலுவை மரணத்தைப்பற்றியும் அவர் பேதுருவிடம் சொன்ன போது, அவன் அவருக்கு உதவிசெய்வதாக நினைத்து, அப்படிப்பட்ட சம்பவம் நிகழ்வதைத் தடுக்க சபதம் செய்தான். அவருடைய மிகச் சிறந்த நண்பன் பொல்லாங்கனின் குரலாக மாறிவிட்டான். இயேசு தாம் பிதாவுக்குக் கீழ்ப்படியாதவண்ணம், பேதுருவின் தவறான அன்பு எந்த அளவுக்கு வஞ்சிக்க முடியும் என் பதை அறிந்து, அவர் அவனுடைய பேச்சை ஒதுக்கித்தள்ள வேண்டியிருந்தது.

மற்ற விசுவாசிகளுடனான நம் உறவு நம்பிக்கைக்கேடான நிலைமைக்குள் எப்போது போகிறது என்பதை இனங்காண வேண்டும் என்றால், நாம் மக்களை அல்லது அவர்களுடைய உள்நோக்கங்களை நியாயந் தீர்க்க வேண்டும் என்பதல்ல பொருள். அவர்களுடைய சொற்களும், செயல்களும் நாம் தேவனைப் பின்பற்றுவதற்கு நம்மை உற்சாகப்படுத்துவதைவிட, நம்மை அதிகமாகத் தடுக்கின்றன என்பதை நாம் இனங்கண்டுகொண்டாலே போதும். நாம் அவர்களைவிட உயர்ந்தவர்கள் அல்லது அவர்கள் பொல்லா தவர்கள் என்பதால் அல்ல; மாறாக, நம் மிக மோசமான நோக்கங்களில் நாம் தடுக்கிவிழுவதற்கு அவர்கள் ஒரு தருணமாக மாறிவிடுவார்கள் என்பதை அறிந்து, நாம் அவர்களிடமிருந்து விலகி இருக் கிறோம். பிரிவை உண்டாக்க வேண்டும் அல்லது ஒரு தனி மனிதனை உயர்த்த வேண்டும் என்பதல்ல; மாறாக, நீங்கள் வாழ்கிற சரீர வாழ்க்கையின் சூழல் உங்களுடைய உண்மையான ஆவிக்குரிய உற்சாகப் படுத்துதலுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை. எனவே, நாம் எதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

**பரிசேயர்களின் புளித்த மாவு** (மத். 16:6-12; 2 தீமோ. 3:2-5): பரிசேயர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இயேசு தம் சீடர்களை எச்சரித்தார். "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களைப்பற்றி" பவுல் பேசியபோது, அவரும் எச்சரித்தார். அவர்கள் எதைப்பற்றிப் பேசினார்கள்? ஒழுக்கத்திற்கு தாங்கள் நிர்ணயிக்கிற தரத்திற்கு மக்களை ஒத் திருக்குமாறு எப்போதும் வற்புறுத்திக்கொண்டிருக்கிற அலப்பல்காரர்களையே அவர்கள் இருவரும் குறிப்பிடுகிறார்கள். அவர்களுடைய நீதி, ஒத்திருப்பதை ஆதாரமாகக் கொண்டதால், அது வெறுமனே புறம்பான நடிப்புதானேதவிர, அது உண்மையாகவே உள்ளே இருப்பதைப் பிரதிபலிப்பதில்லை. எனக்கு ஒரு சகோதரனைத் தெரியும். அவர் மற்றவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தபோது, அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் திருமணத்திற்குமுன்பே பாலியல்உறவு வைத்திருந்தால், அதைத் திருமணத் தின்போது அறிக்கைசெய்யச்சொல்லி அவர்களைத் தர்மசங்கடத்துக்குள்ளாக்கினார். ஆனால், அவரோ தன் அந்தரங்க விவகாரம் ஒன்றை இரகசிய அறையில் ஒளித்துவைத்திருந்தார்.

இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள்போல் தோன்றுகிறார்கள் என்பதற்கும், அவர்கள் உண்மையாகவே எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கும் இடையேயுள்ள முரண்பாட்டை நீங்கள் அடிக்கடி பார்த் தாலுங்கூட, அவர்கள் என்ன செய்தாலும் அதை அவர்களால் சதாகாலமும் நியாயப்படுத்த முடியும். மற்றவர்களை மாற்ற முயற்சிசெய்கிற அதே நேரத்தில், பார்வைக்கு நல்லவர்கள்போல் தோன்ற இவர்கள் செய்யும் முயற்சி, புளித்தமாவைப்போல், மிகவும் தொற்றக்கூடியது. நீங்கள் அதை அறிவதற்கு முன், நீங்களும் அதையே மற்றவர்களுக்கும் செய்துகொண்டிருப்பீர்கள். தேவன் நமக்குள் செய்யும் மறுசாயலாக்கும் வேலையிலிருந்து மட்டுமே நீதி வர முடியும்; எனவே, அதை அனுபவித்த ஒருவனும் அதை மற்றவர்கள்மேல் திணிக்க ஒருபோதும் முயற்சிசெய்ய மாட்டான். அது அப்படி வேலைசெய்யாது என்று அவர்களுக்குத் தெரியும்.

**பிரிக்கும் கோடுகள்** (தீத்து 3:10): யார் தேவனைச் சார்ந்தவர்கள், யார் தேவனைச் சாராதவர்கள் என்று தங்களால் தீர்ப்பிட முடியும் என்று இந்த மக்கள் நினைக்கிறார்கள். இதனால், கருத்துமுரண்பாடும், வதந்தி யும் அவர்களை ஆட்டிப்படைக்கிறது; அவர்கள் எங்கு போனாலும் சரி, அங்கு உடைந்துபோன உறவு களைத்தான் பின்னால் விட்டுச்செல்கிறார்கள். இவைகளை இனங்காண்பது எப்போதும் எளிதல்ல; ஏனென் றால், இறையியலின் தூய்மையைப்பற்றி அவர்கள் பயன்படுத்தும் பகட்டு ஆரவாரச் சொற்றொடர்கள் அவர் களுடைய உண்மையான மனப்பாங்கை மூடிமறைத்துவிடுகின்றன. நிறுவனரீதியான அதிகாரத்தை வைத்துக் கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். காரியங்களை அவர்கள் செய்வதுபோல் செய்யாதவர்களைப் பிரிவினை வாதிகள் என்று அவர்கள் குற்றப்படுத்துகிறார்கள். நேர்மையான கரிசனைகளை எழுப்புவதோ அல்லது கடினமான கேள்விகளைக் கேட்பதோ ஒருபோதும் பிரிவினையல்ல என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

தேவனுடைய மகிமையின் ஒரு சிறிய பக்கத்தின் சிறிதளவு மட்டும்தான் நம் ஒவ்வொருவரிடமும் இருக் கிறது. ஆனால், நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் அந்தப் பகுதியையே முழு ஆபரணமாக்க

விரும்புகிறோம். எனவே, இது கிறிஸ்தவத்தைப் பிடித்தமான உபதேசங்கள், ஆராதிக்கும் பாணியில் தனிப்பட்ட சுவைகள் ஆகியவைகளின் அடிப்படையில் ஆயிரக்கணக்கான தனிப்பட்ட பெயர்களாகத் துண்டு துண்டாக்கிவிட்டது. இது உலகெங்கும் கிறிஸ்துவின் சரீரத்தைச் சின்னாபின்னமாக்கிவிட்டது. நேபாளத்தில் கிறிஸ்தவத்திற்குச் சட்ட அங்கீகாரம் அளிக்கப்படுவதற்குமுன் நான் அந்த நாட்டில் இருந்தபோது, அங்கு இருந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்த பாடுகளில் வியத்தகு அளவிற்கு நான் அன்பையும், ஒற்றுமையையும் பார்த்தேன். ஆயினும், கிறிஸ்தவத்திற்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டபிறகு, எல்லாவிதமான ஸ்தாபனங்களும் முளைத்தெழும்பின; அவர்கள் தங்கள் தங்கள் ஸ்தாபனங்களுடன் சேர்ந்துகொண்டவர்களுக்கு மாதாமாதம் உதவித்தொகை கொடுத்து, கிறிஸ்துவின் சரீரத்தில் பிளவுண்டாக்கினார்கள். நீங்கள் பிரிவினையில் பங்குகொள்ளாதீர்கள். காரியங்களை நீங்கள் செய்து கொண்டிருக்கும் வழிதான் தேவன் உலகத்தில் செய்துகொண்டிருக்கும் மிகச் சிறந்த வழி அல்லது ஒரே வழி என்ற எண்ணத்துக்குள் மூழ்கிவிட வேண்டாம். அப்படிச் செய்தால், நீங்கள் சுயநீதி என்னும் நீர்ச்சுழியில் சிக்கிக்கொண்டு, தேவன் இந்த உலகத்தில் செய்துகொண்டிருக்கும் பெரிய வேலையைத் தவறவிட்டுவிடுவீர்கள்.

**தவறான இடத்தில் வைக்கும் நம்பிக்கை** (பிலி. 3:1-11): தேவனால் தம் வேலையை அவர்களில் செய்து முடிக்க தேவனுடைய திறமையில் நம்பிக்கை வைப்பதைக் கைவிட்டுவிட்டு, தங்கள் சொந்த முயற்சியால் அதைச் சாதிக்க அவர்கள் கடுமையாகப் பிரயாசப்பட்டதுதான் ஆதிச் சபையின்மேல் நடந்த முதல் தாக்குதல். இன்னும், சுயமுயற்சிதான் விசுவாசிகளைப் பக்கவழிக்குத் திருப்பும் மிகப் பெரிய காரியம். மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கிறவர்கள், நம்பிக்கை நிறைந்த வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு எப்போதுமே இடறப்பண்ணுகிற கல்லாக இருப்பார்கள். மக்கள் மற்றவர்கள்மேல் குற்றஞ்சாட்டுவதைப் பார்க்கும்போது அல்லது ஒரு நல்ல கிறிஸ்தவன் செய்ய வேண்டிய காரியங்களின் பட்டியலை அவர்கள் நீட்டுவதை நீங்கள் பார்க்கும்போது, தேவனுடைய வேலையின்மேல் நம்பிக்கை வைப்பதைவிட வேறொன்றின்மேல் நம்பிக்கை வைக்கிற மக்களோடு நீங்கள் இருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

**அறிவுபூர்வமாக நியாயப்படுத்தும் பாவங்கள்** (1 கொரி. 5:1-13): சோதனையோடும், பாவத்தோடும் நாமெல்லாரும் போராடுகிறோம். நம் பலவீனங்களைக்குறித்து நாம் தொடர்ச்சியாகச் செய்யும் மதிப்பீடும், நேர்மையும் உண்மையான சரீர வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான ஆக்கக்கூறாகும். மக்கள் தங் களை நியாயப்படுத்த தங்கள் தோல்விகளுக்குக் காரணகாரியங்களைக் கூறும்போது, இயேசுவின் பாதத்தில் நொறுங்குண்ட மக்களாக வாழ்வதின் சாரத்தை அவர்கள் தவறவிட்டுவிட்டார்கள் என்று பொருள். நாம் எதையும் தவறாகச் செய்வதில்லை என்பதால் தேவன் நம்மை நேசிப்பதில்லை. தேவன் நம்மை நேசிக்கிறார்; ஏனென்றால், அவர் நம்மை நேசிக்கிறார். அவர் பாவிகளாகிய நம்மை மீட்க வந்தார். நாம் நீதிமான்கள் என்று நினைப்பதற்காக, நாம் பாவத்தின் வரையறையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக, நம்மை மறுசாயலாக்கக்கூடிய அந்த ஒரேவொருவரிடம் கிட்டிச் சேருவதற்கு, நம் சோதனைகள் இன்னும் அதிகமான காரணமாக மாறிவிடும். துரதிருஷ்டவசமாக, பாலியல் பாவங்களைப்பற்றி மட்டுமே நாம் இப்படி நினைக்கிறோம். ஆனால், பவுல் கொரிந்தியர்களுக்குக் கூறும் பட்டியலில் பொருளாசை, விக்கிரகாராதனை, உதாசினம், வெறி, கொள்ளை ஆகியவைகளும் அடங்கும்.

**முதல் ஆளாக இருத்தல்** (கொலோ, 2:16-22; 3 யோவான் 9): சுயநலமான பேராசையின் காரணமாக அல்லது சரீரத்தில் தலைமைத்துவத்தைப்பற்றிய தவறான கருத்தின் காரணமாக, அநேக மக்கள் சரீரத்தின் வெளியாக்கம் எப்படியிருந்தாலும் சரி, அதில் முதல் இடத்தை வகிக்க விரும்புகிறார்கள். அந்த இடம் கிறிஸ்துவுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தாலுங்கூட, அந்த இடம் தங்களுக்குரியது என்று அவர்கள் நினைக்கிறார்கள்; தங்களுடைய ஞானம்தான் மேலோங்கிநிற்க வேண்டும் என்றும், தங்களுடைய முன்னுரிமைகள்தான் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், தங்களுடைய திட்டங்கள் தேவனுடைய திட்டங்களாகப் பார்க்கப்பட வேண்டும் என்றும் கோரி, அந்த இடம் தங்களுக்குரியதுபோல் செயல்படுவார்கள். மற்றவர்களுடைய ஆவிக்குரியநிலையை நிர்வகிக்க வேண்டியது தங்களுடைய பொறுப்பு என்றும், மற்றவர்கள் எந்தக் கேள்வியும் கேட்காமல் தங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். யாராவது கேள்வி கேட்டுவிட்டால் தங்களுக்கு ஆபத்து என்று நினைக்கிறார்கள். அவர்களுக்குப் பணிந்தடங்குவதா, அல்லது தேவன் உங்கள் இருதயத்தில் வைத்ததாக நீங்கள் நேர்மையாக நினைப்பதைச் செய்வதா, இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுக்குமாறு அவர்கள் உங்களைக் கட்டாயப்படுத்தும்போது, நீங்கள் இப்படிப்பட்ட ஆட்கள் அருகே இருக்கிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

***அமைதியாக விலகிவிடுங்கள்***

நிச்சயமாக, நம்மில் யாரும் இப்படிப்பட்ட ஒன்றிரண்டு கண்ணிகளில் அவ்வப்போது விழுந்ததில்லை என்று நேர்மையாகச் சொல்ல முடியுமா? இதுதான் அவர்களை மிகவும் அழிக்கக்கூடியவர்களாக மாற்றுகிறது. நம் மாம்சம் எதற்காக ஏங்கிக்கொண்டிருக்கிறதோ, அந்தக் காரியங்களை அவை நமக்கு வழங்குகின்றன—அங்கீகாரம், உயர்ந்தவன் என்ற உணர்வு, கட்டுப்படுத்துதல். அப்படி வாழ்கிற விசுவாசிகளுடன் பழகினால், அவர்களைப்போல் இருக்க உங்களுக்குத் தேவையான சகல சாக்குப்போக்குகளும் உங்களுக்குக்

கிடைக்கும். ஒவ்வொரு நாளும் அவருக்குச் செவிகொடுத்து, அவரைப் பின்பற்ற வேண்டும் என்ற தாகத்தை அவர்கள் நம்மிடமிருந்து திருடிக்கொள்வார்கள். ஆகவே, நாம் அவர்களிடமிருந்து விலகி இருக்கிறோம்.

அழிக்கக்கூடிய உறவிலிருந்து நாம் விலகுவதற்கு தேவன் நம்மை உற்சாகப்படுத்தும்போது நாம் அவருடைய நடத்துதலைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவும், அதைப்பற்றிய எந்தக் குற்ற உணர்வும் நமக்கு இருக்க வேண்டிய தேவை இல்லை என்பதற்காகவுமே பவுல் நமக்கு இந்த அறிவுரைகளைத் தருகிறார். கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்க வேண்டிய ஒற்றுமையைப்பற்றிய இப்படிப்பட்ட தவறான கருத்தை நாம் ஆசையாய்ப் பின்பற்றினோம்; எனவே, சரீர வாழ்க்கையில் காயப்படுத்துகிறவர்களோடும், அழிக்கக்கூடியவர்களோடும்கூட ஐக்கியம் இருப்பதுபோல் நடிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்று நம்மில் அநேகர் நினைக்கிறோம்.

உலகத்தின் மக்களைவிட்டுத் தூரமாக விலகிச்செல்ல வேண்டும் என்று பவுல் ஒருபோதும் சொல்ல வில்லை என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். உலகத்து மக்களிடம் மிக மோசமான தோல்விகளும், பாவங்களும் இருந்தாலுங்கூட, நம்மைப்போன்ற மக்கள் அவர்களை நேசிக்காவிட்டால், வேறு எப்படி அவர்கள் தேவனுடைய அன்பை அனுபவிக்க முடியும்? கவனத்தைத் திசைதிருப்பும் ஆபத்து உலகத்தி லிருந்து வராது; மாறாக, விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிறவர்களிடமிருந்தே வருகிறது. தேவனுடைய ஜீவனைப்பற்றி அவர்களிடம் இருக்கும் தவறான கருத்து அவருடைய அழைப்பின் ஆழத்தை அறியாத படிக்கு அவர்களுடைய கவனத்தை எளிதாகத் திசைதிருப்பிவிடுகிறது.

உலகத்தில் ஏற்கெனவே அநேகக் கள்ளக்கிறிஸ்துகள் தோன்றியிருக்கிறார்கள் என்று யோவான் எழுதிய போது, அவர் இயேசு கிறிஸ்துவை மும்முரமாக எதிர்த்த பொல்லாத மக்களைப்பற்றிப் பேசவில்லை. மாறாக, விசுவாசத்தில் இருப்பதுபோல் தோன்றிய மக்களை அவர் அடையாளம் காண்பித்தார்; அவர்கள், விசுவாசிகள் கிறிஸ்துவை மட்டும் சார்ந்திருப்பதற்குப்பதிலாக, தங்களைச் சார்ந்திருக்கும்படிச் செய் தார்கள். அவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருந்தார்கள்; ஏனென்றால், அவர்கள் விசுவாசிகளின் வாழ்க்கையில் கிறிஸ்துவின் இடத்தை எடுத்துக்கொள்ள விரும்பினார்கள். நம்முடைய நாட்களிலும் சோகமான காரியம் என்னவென்றால், இன்று தேவனுடைய சபையில் தலைவர்களாக இருக்க விரும்புகிற அநேகர் இருக்கிறார்கள்; இவர்கள், விசுவாசிகள் தங்களைச் சார்ந்திருக்கும்படிச் செய்யும்போது மட்டுமே, தங்கள் அழைப்பை நிறைவேற்ற முடியும் என்று நினைக்கிறார்கள். இதன் விளைவு எப்போதும் அழிவையே உண்டாக்குகிறது.

நிச்சயமாக, ஓடுவதற்குச் சுதந்தரம் இருக்கிறது என்பதால் ஓட வேண்டும் என்ற அர்த்தம் இல்லை. அழிவை ஏற்படுத்தும் வகையில் செயல்படும் மக்களே உடைந்துபோன, முறிந்துபோன மக்கள். அவர்கள் நேசிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களை நேசிப்பதற்கு அவர்களுடன் சேர்ந்திருக்க தேவன் உங்களுக்குக் கிருபை அளித்தால், தேவனுடனான உங்கள் உறவை விட்டுக்கொடுக்காமல், நீங்கள் அப் படிச் செய்யலாம், அதைச் செய்யுங்கள்.

ஆனால், அவரை அறிவது என்ற உண்மையான பரிசிலிருந்து ஒரு விசுவாசி உங்களைத் திசை திருப்புவதை நீங்கள் உணரும்போது, நீங்கள் வசைமாரி பொழிய வேண்டிய தேவையில்லை. நீங்கள் எதிர்த்து நிற்கவோ, குற்றஞ்சாட்டவோ, நீங்கள் சரியென்று நிரூபிக்க முயற்சிசெய்யவோ வேண்டிய தேவையில்லை. நீங்கள் அளவுகடந்து எதிர்த்துசெயல்பட்டு, தனியாகச் சுற்றித்திரிபவராக மாற வேண்டிய தேவையில்லை. அவர்களை விட்டு அமைதியாக விலகிச்சென்று, எந்த உறவுகள் உங்களைத் தேவனுக்கு இன்னும் அருகாமையில் ஈர்க்கவும், உங்களில் அவருடைய வேலையை இனங்காணவும் தூண்டுகின்றனவோ, கிறிஸ்துவின் சரீரத்தில் அப்படிப்பட்ட உறவுகளுடன் உங்கள் நேரத்தைச் செலவழியுங்கள்.

எல்லாப் பக்கங்களிலுமிருந்து, வாழ்க்கையின் கோரிக்கைகள் நம்மை அழுத்தும்போது, தந்திரமாகக் கையாளுதல், வதந்தி, பிரிவினை ஆகியவைகள் நிறைந்த மற்ற விசுவாசிகளிடம் நம் சக்தியை வீணாக்கு வதற்கு நம்மிடம் நேரம் இல்லை. மற்ற விசுவாசிகளுடன் இருக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும்போது, அது உற்சாகம், வெளிப்பாடு, தாழ்மை ஆகியவகைள் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா?

கிறிஸ்துவின் சரீரத்தில் வாழும் வாழ்க்கை, உங்களில் அவர் செய்யும் வேலையைச் செய்துமுடிக்கும் அவருடைய திறமையைச் சந்தேகப்படும்படிச் செய்யக்கூடாது; மாறாக, நீங்கள் அவரை இன்னும் அதிக மாக நம்பும்படிச் செய்ய வேண்டும்.

---

இந்தச் செய்தி வெளியிடப்பட்டபிறகு, ஒருவர் பின்வரும் மின்அஞ்சல் எனக்கு எழுதினார்; அது இந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ள சில காரியங்களைத் தெளிவுபடுத்தியது. அதை நான் இங்கு தருகிறேன்:
“மார்ச் மாத இதழில் ‘ஓடுவதற்கான காரணங்கள்’ என்ற தலைப்பை வாசித்தபோது, அடிப்படை மட்டத்திலேயே நான் கொஞ்சம் சங்கடத்துக்குள்ளானேன். வேதத்திலிருந்து நான் உண்மை என்று கண்டு கொண்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட காரியத்தை நீங்கள் கவனக்குறைவினால் விட்டுவிட்டதால், ஒருவேளை இந்தப் பிரச்சினை எழுந்திருக்கக்கூடும். தேவன் தம் அன்பு, கிருபை என்ற கொடையை நமக்குத் தந்திருப்பது நம்மை அவரைப்போலாக்கப் பலப்படுத்துவதற்காகவே; அது நிறைவாக இருக்கும்போது, தேவன் தம் அன்பினால் நம்மை மனிதர்களுடன் ஒப்புரவாக்கி, அவர்மேல் அன்புடன் பக்திகூர்ந்து, அவருக்குக் கீழ்ப்படிய, அது நம்மை விடுதலையாக்குகிற வல்லமையாக இருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசத்தை நீங்கள் குறிப்பாக உணர்த்தியிருந்தீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால், விவாகரத்து செய்யவிருந்த பெண்ணின் காரியத்தில் நீங்கள் அதைத் தெளிவாகத் தெரிவிக்கத் தவறிவிட்டீர்கள். இது எனக்குக் கலக்கமாயிருந்தது.”

என் பதில்: நான் ஆரம்பத்தில் சொன்ன எடுத்துக்காட்டு குறையுள்ள எடுத்துக்காட்டு என்று நான் நினைக்கிறேன். சிலர் அனுபவித்துக்கொண்டிருக்கும் பாடுகளுக்கும், அவர்கள் தேவனிடமிருந்து கேட்டுக் கொண்டிருப்பதற்கும் செவிகொடுக்காமலேயே, அவர்களுக்கு இன்னும் வேதனையைக் கூட்டத் தங்களுக்கு உரிமை உண்டு என்று சில தலைவர்கள் நினைக்கிறார்கள். தலைமைத்துவம் எவ்வளவு புண்படுத்தக்கூடியதாக இருக்க முடியும் என்பதை விளக்குவதற்காக மட்டுமே நான் ஆரம்பத்தில் அந்தக் கதையைக் கூறினேன். ‘ஓடுவதற்கான காரணங்கள்’ சரீர வாழ்க்கையில் அழிவுண்டாக்கும் உறவுகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்பதைப்பற்றியதுதானே தவிர, விவாகரத்துசெய்வதற்கான காரணமாக எடுத்துக்கொள்வதற்காக அல்ல. அந்த எடுத்துக்காட்டு, இந்தக் கட்டுரையில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக வருந்துகிறேன். நீங்கள், இந்த விஷயத்தை என்னிடம் கேட்டதை நான் மிகவும் பாராட்டுகிறேன். தேவன் குணப்படுத்த முடியாத மனித உறவு எதுவும் இல்லை என்று நான் நம்புகிறேன். ஆனால், நான் கூறிய எடுத்துக்காட்டில் இருந்ததுபோன்ற சூழ்நிலைகளில், ஒப்புரவாகுதலுக்கு இரண்டு சாராரும் முன்வர வேண்டும் என்றும் நான் நினைக்கிறேன். நான் குறிப்பிட்டிருக்கும் சூழ்நிலையில் அந்த நேரத்தில் அது சாத்தியமாக இருக்கவில்லை.